# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள் 15.07.2026**

**முன்னிலை**

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 10936/SCIC/2024**

திரு.A.தேவேந்திரன், - மேல்முறையீட்டாளர்
எண்.42, பிரதான சாலை
அம்பேத்கர் நகர், கீழூர்
திருப்போரூர் வட்டம்-603 108.
செங்கல்பட்டு மாவட்டம்
Cell:9791505301

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
செங்கல்பட்டு வட்டம் (ம) மாவட்டம்-603 001.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **13.05.2024** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 19.06.2024 |
| 3. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 22.08.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 13/05/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர் / துணை வட்டாட்சியர், செங்கல்பட்டு வட்டம் (ம) மாவட்டம் அவர்களுக்கு அனுப்பி, அதில் “செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு வட்டாட்சியர் அலுவலகத்தில் 1975 முதல் 2000 வரை ஆண்டுகளில் பராமரித்த பிறப்பு, இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்களின் பதிவேடுகளை கள ஆய்வு செய்யவும் தேவையான ஆவணங்களை நகலெடுக்கவும் சான்றிட்ட நகல் பெறவும் அனுமதி வேண்டி தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 2(J) -ன் கீழ் இந்த மனுவை சமர்ப்பிக்கிறேன்” எனக் கோரியுள்ளார்.

2. இன்றைய (15/07/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர். திரு.A.தேவேந்திரன் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. இவ்வழக்கினைப் பொறுத்த வரையில், மனுதாரர் செங்கல்பட்டு வட்டாட்சியர் அலுவலகத்தில் 1975 முதல் 2000 வரை ஆண்டுகளில் பராமரித்த பிறப்பு, இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்களின் பதிவேடுகளை தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 2(J) -ன் கீழ் கள ஆய்வு செய்ய அனுமதி கோரியுள்ளார் எனத் தெரிய வருகிறது. பொதுத் தகவல் அலுவலர் 07/07/2026 தேதியிட்டு மனுதாரரை 10/07/2026-லிருந்து 14/07/2026 வரையில் உள்ள ஏதேனும் ஒரு நாளில் வருகை தந்து கள ஆய்வு செய்ய தெரிவிக்கப்பட்டதாகவும், ஆனால் மனுதாரர் வருகை புரிந்திடவில்லை எனத் தெரிவித்து 07/07/2026 தேதியிட்டு மனுதாரருக்கு அனுப்பிய கடிதத்தின் நகலினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். **ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான 13/05/2024 தேதியிட்ட மனுவிற்கு 07/07/2026 தேதியிட்டு மிகவும் காலதாமதமாக பொதுத் தகவல் அலுவலரால் பதில் அனுப்பப்பட்டுள்ளது. இத்தகைய காலதாமதத்தை ஆணையம் ஏற்கவில்லை. இனி வருங்காலங்களில், பொதுத் தகவல் அலுவலர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005-ன்படி மனுதாரருக்கு உரிய கால வரையறைக்குள் தகவல்களை அனுப்ப வேண்டுமென்று அறிவுறுத்துவதோடு, அவ்வாறு அனுப்பாத பட்சம், ஆணையம் சட்டப்படியான நடவடிக்கையினை எடுக்க நேரிடும் என எச்சரிக்கப்படுகிறது. ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, நேரடி விசாரணையில் பங்கேற்று தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 10936/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்
செஙகல்பட்டு வட்டம் (ம) மாவட்டம்-603 001.

<u>மேல்முறையீட்டாளர்</u>

திரு.A.தேவேந்திரன்,
எண்.42, பிரதான சாலை
அம்பேத்கர் நகர், கீழூர்
திருப்போரூர் வட்டம்-603 108.செங்கல்பட்டு மாவட்டம்
Cell:9791505301
RG/Sr.PC